**தலைப்பு 327 – காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 327 - காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

**1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவினங்களை நிகழ்ச்சித்திட்டமிடும் போது நிதியாண்டில் செயல்படுத்தப்படக்கூடிய திட்டங்களுக்கு மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட நிதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பான போதிலும், மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதாவது, வெளிநாட்டுப் பயணச் செலவுகள் மற்றும் மென்பொருள் பராமரிப்புச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 500,000 படியாக காணப்பட்டதுடன், வெளிநாட்டு பயண செலவின விடயம் முழுமையாக எஞ்சியிருந்ததுடன், மென்பொருள் பராமரிப்பு செலவின விடயத்திற்கான செலவினம் ரூபா 27,450 ஆகும். அதன்படி, செலவினத்தின் சேமிப்பு சதவீதமாக முறையே 100 சதவீதம் மற்றும் 95 சதவீதம் ஆகும். | 2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள் பெறப்படாததால், வெளிநாட்டு பயணச் செலவின விடயத்தில் மற்றும் மென்பொருள் தொடர்பான பராமரிப்பு நடவடிக்கைகள் நடைபெறாததால் மென்பொருள் பராமரிப்புச் செலவின விடயத்தில் நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. | அங்கீகரிக்கப்பட்ட நிதிகள் நிதியாண்டில் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | SA/MAA/02/01/01 ஆம் இலக்க மற்றும் 2023 நவம்பர் 30 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 05/2023 இன் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடும் நிறுவனத்திலுன்ன பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கடப்பாட்டு இலக்கத்தின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திறைசேரியின் அச்சீட்டு குறிப்பு SA-92 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அந்த கடப்பாடுகளின் இலக்கங்கள் நிதிக்கூற்றுக்களின் தொகுதியில் பின்னிணைப்பு (iv) இல் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் வழிகாட்டியின் பிரகாரம் சரியாக அறிக்கையிடுவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளின் இலக்கத்திற்கமைய நிதிக்கூற்றுக்களின் தொகுதியில் பின்னிணைப்பு (iv) இல் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரியின் அச்சீட்டு குறிப்பு SA-92 இன் பிரகாரம் 16 உருப்படிகளுக்காக ரூபா 76,214 தொகையான பொறுப்புகளின் பெறுமதி காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் 93 உருப்படிகளுக்காக ரூபா 1,741,384 ஆன பொறுப்புகள் காண்பிக்கப்பட்ட காரணத்தால் திறைசேறி அச்சீட்டுக் குறிப்புகளில் குறிப்பிடப்படாத 77 உருப்படிகளுக்குரிய ரூபா 1,665,170 தொகையான பொறுப்புகள் அவதானிக்கப்பட்டன. | 2025 ஆம் ஆண்டின் போது வழிகாட்டியின் பிரகாரம் சரியாக அறிக்கையிடுவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | அனைத்து பொறுப்புகளும் திறைசேறி அச்சீட்டுக் குறிப்புகளில் குறிப்பிடப்பட வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையின் நில வளங்களை உச்சமாகவும் நிலையானதாகவும் நிர்வகிப்பதற்காக தேசிய காணி பயன்பாட்டுக் கொள்கையை திருத்துவதற்கு 2018 ஆகஸ்ட் மாதத்தில் அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது. அதன்படி, இலங்கைக்கான தேசிய காணி பயன்பாட்டுக் கொள்கையை | விடயப்பரப்பை சிறப்பாக உள்ளடக்கும் வகையில் கொள்கை அறிக்கையை வரைதல், கொள்கை திருத்தத்திற்கான அமைச்சரவை ஒப்புதலைப் பெறுதல், வரைவு கொள்கை அறிக்கைக்கு அமைச்சரவை ஒப்புதலைப் பெறுதல் மற்றும் அங்கீகாரத்தின் பிறகு வர்த்தமானியில் வெளியிடுதல் | தேசிய காணி பயன்பாட்டுக் கொள்கையைத் தயாரிக்கும் பணிகள் விரைவாக நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உருவாக்கி தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப அதை திருத்துவது ஒரு முக்கிய பணியாகும். தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப அதைத் திருத்துவதற்காக தயாரிக்கப்பட்ட இறுதி வரைவு காணிகள் மற்றும் சுற்றுலா அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், தேசிய காணி பயன்பாட்டுக் கொள்கையை தயாரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை. | ஆகியவை காணிகள் அமைச்சின் தலையீட்டின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் ஆகும். கொள்கை திருத்தத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2018 ஆகஸ்ட் மாதம் பெறப்பட்டது. திருத்தப்பட்ட வரைவு மூன்று மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு அமைச்சரவை ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதற்காக 2023.05.11 ஆந் திகதி காணிகள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 13 ஆவது அரசியலமைப்பின்படி, தேசிய காணிகள் ஆணைக்குழு நிறுவப்பட்ட பின்னர் இந்த வரைவு காணி பயன்பாட்டுக் கொள்கையை அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க காணிகள் அமைச்சு தீர்மானம் எடுத்துள்ள காரணத்தால், தற்போது அதன் எஞ்சிய பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. கொள்கை ரீதியான காரணங்களுக்காக, காணிகள் அமைச்சினால் நிறைவு செய்யப்பட்ட தேசிய நில பயன்பாட்டுக் கொள்கை அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | |
| (ஆ) | வரையறுக்கப்பட்ட நில வளங்களை முறையாக நிர்வகிப்பதன் மூலம் நாட்டில் நிலையான நில பயன்பாட்டை நிறுவுவதற்குத் தேவையான காணி பயன்பாட்டுச் சட்டம் அங்கீகரிக்கப்படவில்லை. | காணிப் பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களச் சட்டத்தின் வரைவு தொடர்பாக, அமைச்சரவைப் பத்திரம், விவசாயம், கால்நடை வளங்கள், காணிகள் மற்றும் நீர்ப்பாசனம் அமைச்சின் மூலம் 5/6/1/1/CM/24/45 இலக்கம் மற்றும் 16.01.2025 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமப/25/0129/808/010 மற்றும் 2025.02.04 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரத்தின் கீழ் விவசாயம், கால்நடை வளங்கள், காணிகள் மற்றும் நீர்ப்பாசனம் அமைச்சின் செயலாளரால் அதிகாரச்சட்டத்தை வரைபாக்குவதற்கு உரிய கொள்கைப் பத்திரம் இலக்கம் 5/1/ From /Lupp Act மற்றும் 2025.02.11 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சட்ட வரையுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | காணி பயன்பாட்டுச் சட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

**4.2 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான பெறுகைகள் திட்டத்திற்கான மாதிரியை பயன்படுத்தி, அடுத்த ஆண்டுக்கான கொள்முதல் நடவடிக்கைகள், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) இன் படி விரிவாகத் தயாரிக்கப்பட வேண்டும் எனினும், அத்தகைய திட்டமொன்று 2024 ஆம் ஆண்டிற்குத் தயாரிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் விரிவான கொள்முதல் திட்டத்தை தயாரிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | எதிர்வரும் ஆண்டிற்கான கொள்முதல் நடவடிக்கைகள், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் விரிவாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் எதிர்வரும் ஆண்டுக்கான மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, அதன் பிரதிகள் தேசிய பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரச நிதித் திணைக்களம் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் 2024 மார்ச் 19 ஆந் திகதியே கையொப்பமிடப்பட்டிருந்தது என்பதுடன், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டு முதல் வருடாந்திர பெறுகைகள் திட்டத்திற்கு முறையான அனுமதி பெற்று அதன் நகல்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்புமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம், பெறுகைகள் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன் தயாரிக்கப்பட்டு, அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினை பெற்று, அதன் நகல்களை தேசிய பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரச நிதித் திணைக்களம் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட வேண்டும். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 இன் பிரகாரம், விலைக்கேள்வி திறத்தல் தொடர்பான பணிகள் உரிய மாதிரிப் படிவத்தில் அறிக்கையிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நகல்ஸ் செயற்திட்டத்திற்காக பொருட்களை கொள்வனவு செய்தல், பாதுகாப்பு வேலியொன்றை பொருத்துதல் மற்றும் வடிகால் அமைப்பை சரிசெய்தல் மற்றும் திணைக்களத்தின் கீழ் கூட்ட மண்டபத்தை புதுப்பித்தல் ஆகியவற்றுக்கான பெறுகை நடைமுறைகளின் போது விலைக்கேள்வி திறக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் | விலைக்கேள்வி திறப்பு பதிவுக் குறிப்புகளை முறையாக பூர்த்தி செய்யுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் விலைக்கேள்வி திறத்தல் தொடர்பான பணிகள் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் அறிக்கையிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| விலைக்கேள்வி திறத்தல் தொடர்பான பதிவுக் குறிப்பு படிவத்தில் விலைக்கேள்வி திறப்பு பதிவுக் குறிப்புகள் மற்றும் ஒவ்வொரு விலைக்கேள்வி தொடர்பிலுமான அவதானிப்புகள் ஆகியவை விலைக்கேள்வி திறக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

**5. நல்லாளுகை**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய திணைக்களத்திற்காக அதன் கணக்கீட்டு உத்தியோகத்தரால் 2022 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு திணைக்களம் பல தடவைகள் பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. தொடர்ந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. | உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டும். |

**6. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 660 ஆன போதிலும், உள்ளபடியான எண்ணிக்கை 595 ஆக காணப்பட்டதுடன், சிரேஷ்ட மட்டத்திலான 16 பதவி வெற்றிடங்கள், இரண்டாம் நிலை மட்டத்திலான 35 பதவி வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்திலான 14 வெற்றிடங்களுடன் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 65 ஆக காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டுக்கான செயலாற்றல் அறிக்கை மற்றும் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் ஆகியவற்றை கருத்திற்கொள்ளும் போது செயல்நடவடிக்கைத் திட்டம் 2023.12.21 ஆந் திகதியும் செயலாற்றல் அறிக்கை 2024.12.31 ஆந் திகதியும் தயாரிக்கப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பில் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1113/VIII ஆம் இலக்க மற்றும் 2024.12.04 ஆந் திகதி திருத்தப்பட்ட பதவியணி திருத்தத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்கான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனால், 2023.12.21 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட | திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் 2024 திசெம்பர் 21 ஆந் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்டுள்ளமையால், இரு அறிக்கைகளினதும் தரவுகள் சமனாக காணப்பட வேண்டும். |

பதவியணியை செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கும் போது 37 ஆன மிகையை கொண்டிருந்தது. செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரித்தல் மற்றும் செயலாற்றல் அறிக்கையை தயாரித்தல் ஆகியவற்றுக்கிடையேயான காலப்பகுதியினுள் (2023.12.21 – 2024.12.31) சிரேஷ்ட மட்டத்தில் ஓய்வு பெறல் இடம்பெற்றுள்ளமையால் ஒரு வெற்றிடமும், மூன்றாம் மட்டத்தில் நிர்வாக உத்தியோகத்தர் வெற்றிடம் நிரப்பப்பட்டமையும், இரண்டாம் மட்டம் மற்றும் ஆரம்ப மட்டம் ஆகியவற்றை கருத்திற்கொள்ளும் போது விடுவித்தல், சேவையை விட்டுச் செல்லல், ஓய்வூதிய பெறல், இடமாற்றம் பெற்றுச் செல்லல், இராஜிநாமா செய்தல் ஆகிய காரணங்களால் 29 உத்தியோகத்தர்களின் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒட்டுமொத்த பதவியணியில் மாற்றமொன்று ஏற்பட்டுள்ளது.